2020 மார்ச் 17]

*__திரு. துரைமுருகன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இரண்டு கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அதற்குமுன், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர்அவர்களிடத்தில்இந்தஒருகேள்வியைக்கேட்டுவிடுகிறேன். நீங்கள் சொல்வது எல்லாம் சரி, நான் ஒப்புக்கொள்கிறேன். அதை செய்கிறீர்கள்; இதைச் செய்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் பயம் இருக்கிறதே! வீட்டிற்குப் போனால் சட்டையை எல்லாம் வெளியே கழற்ற சொல்கிறார்கள். குளித்துவிட்டுத்தான் உள்ளே போக வேண்டும், குழந்தைக் குட்டிகளை வைத்துக்கொண்டு எதற்கு இது வம்பு என்கிறார்கள். ஆகையினால், இன்னும் கொஞ்ச நாள் சென்றால், நீங்கள் வெளியே சுற்றிக்கொண்டு வருகிறீர்கள் என்று சொல்லி, வீட்டிலே எங்களையே தனி ward–ல் வைத்துவிடுவார்கள் போலும். ஆகையினால், நாங்கள் எல்லாம் என்ன சொல்கிறோம் என்றால், சட்டமன்றத்தை நாம் தொடந்து நடத்த வேண்டுமா அல்லது என்ன செய்யலாம் என்பதற்கு, நாளை காலையில் BAC கூட்டம் போடுங்கள். நாம் பேசலாம். நானும் விளக்கமாகத் தெரிந்துகொள்கிறேன். அது ஒன்று.

(ஆ) தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவுவதைத் தடுத்தல்

*__திரு. துரைமுருகன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான கவன ஈர்ப்பு குறித்து தெரிவிக்க விரும்புகிறேன். வெறுக்கத்தக்க ஆனால் முளையிலேயே கிள்ளியெறியத்தக்க ஒரு கலாச்சாரம் தமிழ்நாட்டில் பரவுகிறது என்பதை நான் இன்றைக்கு பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். வெடிகுண்டு கலாச்சாரம் என்பது தமிழ்நாட்டில் எப்படியோ அரும்பியிருக்கிறது. ஒரே நாளில் இரண்டு இடங்களில் குண்டு வீச்சு நடந்திருக்கிறது. ஒன்று, மதுரையில் முன்னாள் MLA திரு. வேலுசாமி அவர்கள் வீட்டில் குண்டுவீச்சு நடைபெற்றிருக்கிறது. பெரும் சேதாரத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அது எப்படியெல்லாம் நடைபெற்றது என்பதை நான் விவரிக்க விரும்பவில்லை. அதன் காரணத்தை, நடந்தவற்றை மட்டும் நான் சொல்கிறேன். இன்னொன்று, எங்கள் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. வீரமணியார் அவர்கள் வீட்டிலேயே குண்டுவீச்சு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இது எவ்வளவு அபாயகரமானது

என்பதை இந்த மன்றம் உணர வேண்டும். நாடு உணர வேண்டும். ஆகையினால், அதை அவர் வேண்டுமானால் சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் அல்லது அவர்களுக்கு ஏதும் பிரச்சினை கிடையாது. ஆனால், நிலைமை மோசமாக இருக்கிறது. இந்தக் கலாச்சாரம் தொடருமானால், அது நல்லதல்ல. வேண்டுமானால், தி.மு.க.வினர் வீட்டிலும் வெடித்தது; அ.தி.மு.க.வினர் வீட்டிலும் வெடித்தது என்று சொல்லலாம். ஆனால், இது வெறுக்கத்தக்கது. எந்தக் கட்சி வித்தியாசமும் இல்லாமல் இந்தக் கலாச்சாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று மெத்த பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன். இது வளரத்தக்கதல்ல.

முற்பகல் 11–45

இன்னொன்று, கும்பகோணத்தில் நடைபெற்றது எவ்வளவு பயங்கரம். பாவம் வீட்டில் owner மற்றும் அவர் wife உட்கார்ந்திருந்தார். பத்திரிகை வைக்க வந்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, உள்ளே நுழைந்து இரும்பு கம்பியாலே அடித்து அவரை சாகடிக்கிறார்கள். அவர் அதே இடத்தில் சாகின்ற வரையில் அடிக்கிறான். அவர் துணைவியார் கையெடுத்து கும்பிடுகிறார். கடைசியில் அவளை அடிக்கப் போகிறான். அவர் ‘அண்ணா, என்னை விட்டுவிடுங்கள்’ என்று கதறுகிறாள். அந்தக் கொடூர நெஞ்சத்தில்கூட எங்கேயோ ஒரு கருணை பிறந்து, அவளை அடிப்பதற்கு தூக்கிய இரும்பு கம்பியை அடிக்காமல் விட்டுவிட்டு போய்விட்டான். அவள் கதறிக்கொண்டிருக்கிறாள். ஆக வீடு புகுந்து கொலை செய்கிற சம்பவங்களை, வீடுகளிலேபோய் வெடிகுண்டு எறிகிற சம்பவங்களை இந்த நாட்டில் அனுமதிக்க முடியாது. இதில் கட்சி வித்தியாசம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதைச் செய்ய வேண்டும். எனக்கு என்ன பயம் என்று கேட்டால் தேவர் பெருமகன் சொல்வார், ‘மங்கை சூதகமானால் கங்கையிலே மூழ்கலாம், கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது’ என்று. அதைப்போல மக்களுக்கு ஏதாவது பயமிருந்தால் மந்திரிகளை அணுகலாம். மந்திரி வீட்டிலேயே குண்டு போட்டால் யாரிடம் போய்ப் பேசுவது? விளையாட்டல்ல, மிகவும் serious ஆன விஷயம். உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, யார் யார் கைது செய்யப்பட்டார்கள் என்பதை இந்த அவையில் எழுப்பிய காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு தொடர் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இப்பொழுதுதான் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றீர்கள். இதன் முழு விளக்கத்தையும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்டு, நான் விளக்கமளிக்கின்றேன். கிடைக்கப்பெற்ற விளக்கத்தை தற்போது உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் நேற்று, 16–3–2020 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் சின்னக்கோடியூர் கிராமத்திலுள்ள தங்கவேலு பீடி மண்டி திடீரென தீப்பிடித்து எரிந்ததில், சுமார் 70,000 ரூபாய் மதிப்புள்ள 30 பீடி இலை பண்டல்கள் எரிந்து சேதமடைந்துள்ளன. ஊழியர்கள் தீயை அணைத்தனர். இந்த மண்டியில் 10 தொழிலாளர்கள்தான் பணிபுரிந்து வருகின்றனர். இந்த பீடி மண்டியில் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்களின் சகோதரர் அழகிரி, இராவணன் ஆகியோர் பங்குதாரராக இருந்து நடத்தி வருகின்றனர். திரு. கே.சி. காமராஜ் நிருவாகம் செய்துவருகிறார். இது ஒரு சாதாரண தீ விபத்துதான். ஆனால், ஊடகங்களில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாக ஒரு தவறான செய்தி வெளிவந்திருக்கிறது. அந்தச் செய்தியை வைத்துதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் இதை எழுப்பியிருக்கின்றார். இதுதொடர்பாக, இதுவரை எந்தவொரு புகாரும் காவல் துறையினரால் பெறப்படவில்லை. எவரும் புகார் கொடுக்கவில்லை. இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இப்பொழுதுதான் இதுமாதிரி சம்பவங்கள் நடைபெறுவதாக ஒரு தோற்றத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார். உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், உங்களுடைய Chairman, சிவகங்கையிலே நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவர் காரிலே சென்றபொழுது remote குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. எல்லா ஆட்சிக் காலங்களிலும் இதுமாதிரி சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும் குற்றங்களை குறைப்பதற்காகவும், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகவும்தான், ஆங்காங்கே CCTV cameras பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 17

நடைபெறாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எல்லா ஆட்சிக் காலங்களிலும் அவ்வப்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. சொந்தப் பிரச்சினைக்காக இவ்வாறு நடைபெறுகிறதே தவிர, மற்றபடி அல்ல. இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தி, இனி அதுமாதிரி சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கொரோனா வைரஸ் நோய் பரவுதலைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இங்கே corona virus பற்றிச் சொன்னார்கள். நேற்றையதினம்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் corona virus பற்றி இங்கே குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து மாலையிலேயே அதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக அதுகுறித்து தெரிவித்தார். அதிலே உள்ளே செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதைப்பற்றி இங்கே தெரிவித்தார்கள். அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. Corona virus தடுப்பு நடவடிக்கையில் அரசு முழுவீச்சுடன் ஈடுபட்டுவருகின்றது. ஆகவே என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அத்தனை தடுப்பு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. அதைத்தான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார். அச்சப்பட வேண்டிய அவசியமே இல்லை. கிட்டத்தட்ட 8 கோடி பேர் இருக்கின்ற தமிழகத்தில், இந்த நோயினால் இப்பொழுது ஒருவர்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார். நோய் எல்லோருக்கும் வருகிறது. இன்னும் சொல்லப் போனால் அனைவருமே மருத்துவமனையில் போய் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறோம். நானும் மருத்துவமனையில் போய் பரிசோதனை செய்திருக்கிறேன். நீங்களும் அடிக்கடி மருத்துவமனைக்குப் போய் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறீர்கள். நோய் வருவது இயற்கை, அதை யாராலும் தடுக்க முடியாது. ஏதோ ஒரு ரூபத்தில் அனைவருக்கும் நோய் வருகிறது. ஆனால், இந்த வைரஸ் நோய் அபாயகரமான நோய் என்று உலக நாடுகளிலிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 110 நாடுகளில் நோய் பரவியுள்ளதாக செய்திகள் வருகின்றன. ஆகவே, இதை வைத்துக்கொண்டுதான்